சுருக்கம்

வேளாண்மைத்துறை–வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம்–தனி அலுவலர் நியமனம்–ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் விற்பனைக்குழுவிலிருந்து பிரித்து திருப்பூர் விற்பனைக்குழு தோற்றுவித்தது–ஈரோடு வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) அவர்களை திருப்பூர் விற்பனைக்குழுவின் தனி அலுவலராக நியமனம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

## வேளாண்மைத் (வேவி.2) துறை

அரசாணை (2டி) எண்.92

நாள் 09.09.2016
திருவள்ளுவர் ஆண்டு 2047,
ஆவணி திங்கள் 24–ம் நாள்

படிக்கப்பட்டவை:–

1) அரசாணை (நிலை) எண்.252 வேளாண்மை (வேவி2) துறை, நாள் 20.10.2010.
2) அரசாணை (நிலை) எண்.07, வேளாண்மை (வேவி2 ) துறை, நாள் 09.01.2012.
3) அரசாணை (நிலை) எண்.08, வேளாண்மை (வேவி1) துறை, நாள் 09.01.2015.
4) வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் கடித எண்.விகுதி 7/ 21699/09, நாள் 24.03.2015, 13.10.2015 மற்றும் 14.01.2016.

•••

**ஆணை:–**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் விற்பனைக்குழுக்களின் கீழ் செயல்பட்டு வந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை மாற்றியமைத்து, கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் விற்பனைக்குழுக்களை தோற்றுவித்து முதனிலை அறிவிக்கை வெளியிடப்பட்டது.

2) மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் கோயம்புத்தூர், ஈரோடு விற்பனைக்குழுக்களை பிரித்து கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் விற்பனைக்குழுக்களை ஏற்படுத்த உறுதி அறிவிக்கை வெளியிடப்பட்டது.

3) மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட திருப்பூர் விற்பனைக்குழுவிற்கு ஒரு செயலாளர், ஒரு மேலாளர், ஓர் உரிமயிட ஆய்வாளர் மற்றும் இரண்டு ஒட்டுநர்கள் ஆகிய ஐந்து பணியிடங்களை புதியதாக தோற்றுவித்தும், திருப்பூர் விற்பனைக்குழு தலைமை அலுவலகம் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு தேவைப்படும் 104 பணியிடங்களை கோவை மற்றும் ஈரோடு விற்பனைக்குழுக்களிலிருந்து பணியிடப்பெயர்ச்சி செய்தும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4) மேலே நான்கில் படிக்கப்பட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கடிதத்தில், 1987–ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் சட்டப் பிரிவு 10–இன் கீழ் திருப்பூர் விற்பனைக்குழுவிற்கு

(த.பி.பா)

உறுப்பினர்கள் நியமனம் செய்ய இயலாத சூழ்நிலையில், மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 33–இன்கீழ் விற்பனைக்குழுவினை நிர்வகிப்பதற்காக தனி அலுவலரை நியமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது எனவும், இதுபோன்று நீலகிரி விற்பனைக்குழு புதியதாக தோற்றுவிக்கப்பட்டபோது அவ்விற்பனைக்குழுவிற்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படாத நிலையில் வேளாண்மை இணை இயக்குநர் (தோட்டக்கலை), உதகை, அவர்களை மேற்காணும் சட்டப்பிரிவு 33–இன்கீழ் நீலகிரி விற்பனைக்குழு தனி அலுவலராக நியமித்து அரசாணை எண்.28 வேளாண்மைத் (வேவி.1) துறை, நாள் 27.02.2006–இன்படி ஆணையிடப்பட்டுள்ளது என்றும், ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) பதவியில் உள்ளவர்களையே அந்தந்த மாவட்ட விற்பனைக்குழுக்களில் தனி அலுவலராக நியமித்து ஏற்கனவே அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், தற்போது திருப்பூர் மாவட்டத்திற்கென வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) பதவி தோற்றுவிக்கப்படாமல் உள்ளதாலும், திருப்பூர் விற்பனைக்குழுவானது புதியதாக தோற்றுவிக்கப்பட்ட விற்பனைக்குழு என்பதாலும், தற்போது திருப்பூர் விற்பனைக்குழுவின் பணிகளில் எவ்வித காலதாமதமும் ஏற்படாத வண்ணம் இவ்விற்பனைக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமனம் செய்யும் வரையில், 1987–ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் சட்டப் பிரிவு 33(1)–இன்படி தலைவர்/தனி அலுவலர் பணியிடத்தினை உருவாக்குவதும் மற்றும் அப்பணியிடத்தினை நிரப்புவதும் மிகவும் அவசியமாகிறது என்றும், எனவே, நீலகிரி விற்பனைக்குழுவிற்கு தனி அலுவலரை நியமனம் செய்ததைப் போன்றே, திருப்பூர் விற்பனைக்குழுவிற்கும் 1987–ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் சட்டப் பிரிவு 33(1)–இன்கீழ், ஈரோடு வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) அவர்களை திருப்பூர் விற்பனைக்குழுவின் தனி அலுவலராக நியமனம் செய்திட உரிய ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

5) வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று 1987 ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் சட்டப்பிரிவு 33(1)–ன்படி ஈரோடு வேளாண்மை துணை இயக்குநர் (வே.வ) அவர்களை, ஏற்கனவே அன்னார் வகித்து வரும் ஈரோடு விற்பனைக் குழுவின் தனிஅலுவலர் பொறுப்புடன், திருப்பூர் விற்பனைக் குழுவின் தனி அலுவலராகவும் கூடுதல் பொறுப்பில் நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது.

6) மேலே ஆணையிட்டவாறு, திருப்பூர் விற்பனைக் குழுவில் தனிஅலுவலராகக் கூடுதல் பொறுப்பேற்ற விவரத்தை அரசுக்கு உடன் தெரிவிக்குமாறு முதன்மைச் செயலாளர்/வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ககன்தீப் சிங் பேடி,**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்.**

பெறுநர்
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர், சென்னை–32.
துணை இயக்குநர் (வே.வ), ஈரோடு (வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் வாயிலாக)

(த.பி.பா)

தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியம், சென்னை–32.
வேளாண்மை ஆணையர், சென்னை–5
தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர், சென்னை–5.
மாவட்ட ஆட்சியர், திருப்பூர்/ஈரோடு
தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்), சென்னை–35.
தலைமைக்கணக்காயர் (A&E), சென்னை–18.
தலைமைக்கணக்காயர் (Audit I), சென்னை–18.
செயலாளர், வேளாண் விற்பனைக்குழு, திருப்பூர் மற்றும் ஈரோடு.
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை, சென்னை–108.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநிலக் கணக்காயர்,
(பொது (ம) சமூகப் பிரிவு தணிக்கை) அலுவலகம், சென்னை–9.
மாவட்ட கருவூல அலுவலர், திருப்பூர்/ஈரோடு

<u>நகல்</u>
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்களின் தனிச்செயலாளர், சென்னை–9.
நிதி (வேளாண்மை) துறை, சென்னை–9.
வேளாண்மை (வே.வி.1/வே.வி.3/வே.நி.1) துறை, சென்னை–9.
வேளாண்மை (அநமு–3) துறை, சென்னை–9 (அட்டவணைப்படுத்தும் வகைக்கு).
இருப்பு கோப்பு/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

15/9/16.
பிரிவு அலுவலர்
15.9.16